**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**
**வெள்ளிக்கிழமை பிரசங்கம்**
**13 மார்ச் 2020 / 18 ரஜப் ஹிஜிர் 1441**

# <u>கஞ்சத்தனத்தைத் தவிர்ப்பது</u>

**الحَمْدُ لِلَّهِ الَّـذِي خَلَـقَ الإِنسَـانَ فِي أَحْسَـنِ تَقْـوِيمٍ، وَأَمَـرَنَا بِالتَّقْـوَى وَالخُلُـقِ الكَرِيمِ، وَأَشْهَدُ أَن لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ، اللَّهُمَّ صَلِّ وَسَلِّمِ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَصَحْبِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ اللهِ، اِتَّقُوا اللهَ حَقَّ تُقَاتِهِ وَلَا تَمُوتُنَّ إِلَّا وَأَنتُم مُسْلِمُونَ.**

**வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள அருள்மிக்க ஜமாஅத்தார்களே!**

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் மீதான நமது "தக்வா" (பக்தியை) அதிகரித்துக் கொள்வோமாக! அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு அடிபணிந்து நடந்து கொள்வோமாக! அல்லாஹ் தடை செய்துள்ள விஷயங்களிலிருந்து தவிர்ந்து கொள்வோமாக! ஒவ்வொரு நாளின் காலைப் பொழுதில், மலக்குகளான வானவர்கள் அல்லாஹ்விடம் நமக்காகப் பிரார்த்தனை செய்கிறார்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள். அல்லாஹ், திருக்குர்ஆனின் "அல்-பகரா" எனும்

அத்தியாயத்தின் பின்வரும் 245-வது வசனத்தில் கூறும் கருத்துக்களில் கவனம் செலுத்துவோமாக!:

مَّن ذَا ٱلَّذِى يُقْرِضُ ٱللَّهَ قَرْضًا حَسَنًا فَيُضَٰعِفَهُۥ لَهُۥٓ أَضْعَافًا كَثِيرَةً ۚ وَٱللَّهُ يَقْبِضُ وَيَبْصُۜطُ وَإِلَيْهِ تُرْجَعُونَ ﴿٢٤٥﴾

பொருள்: (கஷ்டத்திலிருப்போருக்காக) அல்லாஹ்வுக்கு அழகிய கடன் எவர் கொடுக்கின்றாரோ, அதனை அவருக்கு அல்லாஹ் இருமடங்காக்கி, பன்மடங்காக்கச் செய்வான். (அதாவது, அதற்குப் பகரமாக பன்மடங்கு நன்மைகளை அவருக்கு வழங்குவான்). அல்லாஹ்தான் (உங்கள் செல்வத்தைச்) சுருக்குகிறான் (குறைக்கின்றான்). அவனே அதைப் பெருக்கியும் தருகிறான்; அன்றியும் நீங்கள் அவனிடமே மீட்டப்படுவீர்கள்.

**அன்பிற்குரிய சகோதரர்களே!**

நான் தற்போது ஓதிக் காண்பித்த வசனமாகிறது, ஒரு சிறப்பான தன்மையைப் பற்றி கூறுகிறது. அதனை நம்மில் நாம் ஏற்படுத்திக் கொள்வது அவசியமாகும். அதுதான், தயாளத்தன்மையும் பெருந்தன்மை யுமாகும். காரணம், தயாளத்தன்மை, கொடைத்தன்மை நம்மிடம் இல்லையெனில் மற்றொரு தீய தன்மை நம்மிடம் குடிகொண்டு விடும். அதுதான், கஞ்சத்தனம் ஆகும். கஞ்சத்தனம் என்பது பல விஷயங்களில் காணப்படுகின்றன. அவற்றில் சில, அல்லாஹ் நமக்கு வழங்கியுள்ள கல்வியறிவை மற்றவர்களுக்கு வழங்காமல் கஞ்சத்தனம் செய்வது, மற்றவர்களைச் சந்திக்கும் போது ”ஸலாம்” கூறாமலிருப்பது,

இறைத்தூதர்(ஸல்) அவர்களின் பெயரைக் கேட்டும் கூட, அவர்கள் மீது "ஸலவாத்" சொல்லாமலிருப்பது ஆகியவையாகும். எனினும், கஞ்சத்தனத்தில் மிகவும் மோசமானது அல்லாஹ் கொடுத்துள்ள செல்வத்திலிருந்து தேவைப்பட்டவர்களுக்குக் கொடுக்காமலிருப்பதாகும். இறைத்தூதர்(ஸல்) அவர்கள் ஒரு ஹதீதில் நவின்றுள்ளார்கள்:

مَا مِنْ يَوْمٍ يُصْبِحُ العِبَادُ فِيهِ إِلَّا مَلَكَانِ يَنْزِلَانِ، فَيَقُولُ أَحَدُهُمَا: اللَّهُمَّ أَعْطِ مُنْفِقًا خَلَفًا، وَيَقُولُ الآخَرُ: اللَّهُمَّ أَعْطِ مُمْسِكًا تَلَفًا

பொருள்: அடியார்கள் ஒவ்வொரு நாளும் காலையில் எழுகின்ற போது இரண்டு மலக்குகள் (வானவர்கள்) வானத்திலிருந்து இறங்குகிறார்கள். அவர்களில் ஒருவர்: "யா அல்லாஹ்! யார் தர்மம் செய்கிறாரோ, அவர் செய்த தர்மத்தை மீண்டும் அவருக்குத் திருப்பி கொடுப்பாயாக!" எனக் கூறுகிறார். மற்றொருவர்: யா அல்லாஹ்! யார் தர்மம் செய்யாமலிருக்கின்றாரோ அவரது செல்வத்தை அழித்து விடுவாயாக! எனக் கூறுகிறார். (ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்கள்: இமாம் புகாரி ரஹ், இமாம் முஸ்லிம் ரஹ்)

மேற்கண்ட ஹதீதில் கூறப்பட்டுள்ள வானவர்களின் பிரார்த்தனையாகிறது, அல்லாஹ் நமக்கு வழங்கியுள்ள வெகுமதிகளை, செல்வத்தை அல்லாஹ் விரும்பும் வழியில் பயன்படுத்த வேண்டுமென நமக்குப் போதிக்கிறது. நமது செல்வத்தின் விஷயத்தில் நாம் கஞ்சத்தனத்தமாக இருப்பது கூடாது எனவும் போதிக்கிறது. காரணம், கஞ்சத்தனமாகிறது நம்மைத் தாழ்த்தி

விடும். நம்மைச் சுற்றியுள்ள மக்களுடனான நமது உறவை அழித்து விடும்.

அல்லாஹ் நமக்கு வழங்கியுள்ள வெகுமதிகளை, செல்வத்தை சமுதாய நலனுக்காகப் பயன்படுத்தி, கஞ்சத்தனத்தை மிகைத்து, அத்தீய தன்மையிலிருந்து நம்மை நாம் பாதுகாத்துக் கொள்வது அவசியமாகும். எனினும், நாம் நமது செல்வத்தின் மூலமாகவோ, கல்வியறிவு மற்றும் கருத்துக்களின் வாயிலாகவோ, தொழில், தொண்டூழியம் செய்வதன் மூலமாகவோ பங்காற்ற முயலும் போது நம்மிடம் உளத்தூய்மை காணப்படுவது மிகவும் முக்கியமான அம்சமாகும்.

கஷ்டமான இக்காலங்களில் ஒன்றுபட்டு வாழ்வோமாக! நம்மையும் நமது குடும்பத்தார்களையும் நமது சமுதாயத்தையும் நாட்டையும் அனைத்து விதமான தீங்குகளிலிருந்து பாதுகாக்குமாறு எல்லாம் வல்ல அல்லாஹ்விடம் வேண்டிக் கொள்வோமாக! அல்லாஹ், நமது முயற்சிகளை ஏற்று, திருப்தியடைவானாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

بَارَكَ اللهُ لِي وَلَكُمْ فِي الْقُرْآنِ الْعَظِيْمِ، وَنَفَعَنِي وَإِيَّاكُمْ بِمَا فِيْهِ مِنَ الآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيْمِ، وَتَقَبَّلَ مِنِّي وَمِنْكُمْ تِلَاوَتَهُ إِنَّهُ هُوَ السَّمِيْعُ الْعَلِيْمُ، أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ الْعَظِيْمَ لِي وَلَكُمْ، وَلِسَائِرِ الْمُسْلِمِيْنَ وَالْمُسْلِمَاتِ، وَالْمُؤْمِنِيْنَ وَالْمُؤْمِنَاتِ، فَاسْتَغْفِرُوهُ فَيَا فَوْزَ الْمُسْتَغْفِرِيْنَ وَيَا نَجَاةَ التَّائِبِيْنَ.